# ஓம் ஶ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் **340**தலைப்பு "நம் உள்ளே உள்ள சாயியுடன் இணைந்திருத்தல்"

## நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் நமக்குள்ளே தேடுதல் என்ற புத்தகத்தின் பக்கம் **20-24**லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:நான் காலை வேளையில் நடைபயிற்சி செய்யும் போது பகவான் பாபா உடன் வருவாரா.

ஏ.கே:இந்த கேள்விக்கு என்னிடம் விடை இல்லை.ஸ்வாமி எப்போதும் உன் உள்ளேயே உறைகிறார் என புரிந்து கொண்டால் நடைபயிற்சி செய்வதும் அவரே.உணவு உண்பதும் அவரே.அனைத்து செயல்களையும் உள்ளிருந்து புரிவதும் அவரே.

ஒரு முறை நாங்கள் அனைவரும் உணவு உண்ணும் போது ஸ்வாமி மட்டும் உண்ணவில்லை.ஸ்வாமி நீங்கள் ஏன் உணவு எடுத்து கொள்ளவில்லை என கேட்டால் நீங்கள் அனைவரும் உண்பது என்னையே வந்தடைகிறது என்றார்.

எனவே நீங்கள் நடை பயற்சி செய்யும் போது பகவான் பாபா தனியாக நடந்து வர வேண்டியதில்லை.

அடுத்த கேள்வி:

பகவானுடன் சேர்ந்து உணவருந்த,உறங்க,காரில் பயணிக்க, அவர் பெற்றோருக்கு கிடைத்ததைபோல் நிம்மதியாக உயிர் விட நான் என்ன செய்ய வேண்டும்.

ஏ.கே: நண்பரே ஸ்வாமியின் காரை ஓட்டுவதற்கு டிரைவர் இருக்கிறார்.

உணவு பரிமாற சமையல்காரர்கள் உள்ளனர்.பில்டிங்கை கவனித்துக் கொள்ள செக்யூரிட்டி இருக்கிறார்கள்.இவர்களெல்லாம் எப்போதும் ஸ்வாமியுடன் உடல் அளவில் நெருங்கித்தானே இருக்கிறார்கள்.

அது முக்கியமல்ல.

உங்கள் அருகே அமர்ந்து இருக்கும் ஒவ்வொருவரும் ஸ்வாமியே என நீங்கள் உணர்ந்தால் நீங்கள் எப்போதும் ஸ்வாமியுடன் உண்கிறீர்கள்,

பயணிக்கிறீர்கள்,ஸ்வாமியுடன் நெருங்கி இருக்கிறீர்கள் என்பது புரியும்.

நீங்கள் உணவை இறைவனுக்கு படைத்து விட்டு பிறகு உட்கொண்டால் அதுவே ஸ்வாமியுடன் சேர்ந்து உணவருந்துவதாகும்.நீங்கள் காரில் ஸாயி பஜன் கேட்டுக் கொண்டே காரை ஓட்டிச் சென்றால் அதுவே ஸ்வாமியுடன் காரில் பயணிப்பதாகும்

இதுவே உண்மையான ஆன்மீகமாகும்.இந்த அனுபவத்தை பெற ஒவ்வொருவரும் ஏங்க வேண்டும்.

அடுத்த கேள்வி:எங்களில் பலருக்கும் ஸ்வாமியிடம் நேர் காணல் கிடைத்ததில்லை.ஸ்வாமியே இன்டர்வியூவை விட இன்னர்வியூவிற்கு முயற்சி செய் என கூறுகிறார்.ஆனால்பல சாயி சொற்பொழிவாளர்கள் ஸ்வாமி தங்களுக்கு கொடுத்த நேர்காணலை விவரிக்கிறார்களே தவிர தாங்கள் முயற்சி த்த இன்னர்வியூ பற்றி ஏதும் சொல்வதில்லையே.

ஏ.கே:இது மிகவும் நேர்மையான கேள்வி.உங்கள் கேள்வி எனக்கு பிடித்திருக்கிறது.சாயி சொற்பொழிவாளர்கள் தங்களுக்கு கிடைத்த நேர் காணலை பற்றி பேசுவது சரியல்ல என்பதே என் எண்ணம்.நான் ஸ்வாமியின் அருகே செல்ல முடியாமல் ஏழு ஆண்டுகள் தவித்தேன்.அப்போது நான் என்ன செய்தேன் தெரியுமா.சாயி பக்தர்களை கண்டு அஞ்சி ஒதுங்கினேன்.

ஏனெனில் அவர்கள் எல்லாம் என்னிடம் உனக்கு நேர் காணல் கிடைத்ததா.பாத நமஸ்காரம் கிடைத்ததா என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.இது போல் ஸ்வாமியிடம் நேர் காணல் கிடைப்பது என்பதெல்லாம் ஒருவரின் தனிப்பட்ட விஷயம்.அவர் அது பற்றி சொற்பொழிவில் பேசுகிறார் என்றால் அவர்களுக்கு பேச வேறு விஷயமில்லை என்றுதான் அர்த்தம்.நானே பல வருடங்களுக்கு அப்படித்தான் இருந்தேன் என்பதை பின்னர் உணர்ந்து கொண்டேன்.

அடுத்த கேள்வி:

எங்களுடைய கடுமையான வேலை சுமைகளுக்கு நடுவே நாங்கள் எவ்வாறு எப்போதும் கடவுளுடன் இணைந்து இருப்பது.பலரும் அலுவலகத்திற்கு பல மணி நேரம் கார் ஓட்டி சென்று திரும்புகிறோம்.

அதில் மிகவும் களைத்து விடுகிறோம்.

அப்படி இருக்கும் போது கடவுளை பற்றி எங்கே நினைக்க முடியும்.

ஏ.கே:இது பிரச்சினை தான்.ஆனால் இதற்கான விடை எளிதானது.இறைவா நான் எப்போதும் நீ உபயோகப்படுத்தி கொள்ளும் ஒரு கருவியே. நான் கார் ஓட்டும் போதும் கம்ப்யூட்டரில் வேலை செய்யும் போதும் நீயே என்னை இயக்குகிறாய்.

அனைத்தும் உன் சங்கல்பமே என்ற பாவத்தை கொண்டு வாருங்கள்.இதுவே சரணாகதி எனப்படுவதாகும்.இந்த மன ஓட்டத்துடன் செயல்படும் போது நீங்கள் கடவுளுடன் இணைந்திருப்பது மட்டுமல்ல கடவுளாகவே ஆகிவிடுகிறீர்கள்.நீங்கள் கடவளாக ஆகி விட்ட பிறகு யாரும் உங்களை கடவுளிடமிருந்து பிரிக்க முடியாது.

எனவே நண்பர்களே எப்போதும் இறைவனும் பற்றிய நினைவுகளுடன் இறைவனுடனேயே ஒன்றியிருந்தோமானால் நாமும் கடவுளாக முடியும்.இதுவே நிரந்தர ஒன்று பட்ட இறை சிந்தனை என்பதாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்

ஜெய் சாயிராம்.